# சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

**சைவநெறி - தரம் 01 / மூன்றாந் தவணை – இரண்டாம் வாரம்**

**தயாரிப்பு – இரத்தினபுரி கல்வி வலயம், ஆரம்பபிரிவு / ஆசிரிய ஆலோசகர் வீ.ராஜகுமாரி**

- ***சமய ஒழுக்கங்களும் விழுமியங்களும்***
- ***கனம் பண்ணுவோம்.***

01). சைவ நற்பண்புகளில் ஒன்றான கனம் பண்ணுதலைக் கடைப்பிடிப்பார். கனம் பண்ணுதல் என்றால் என்ன? என்பதை இலகுவாக எடுத்துக் கூறுங்கள்.

**எடுத்துக்காட்டு** – மரியாதை செலுத்துதல் / வணங்குதல்.

- புத்திமதிகளைக் கேட்டு நடத்தல்.
- பெற்றோர், பெரியவர்கள் பேசும்பொழுது அமைதியாக இருந்து சொல்வதைக் கேட்டல்.
- பெற்றோர் சொல்லும் வேலைகளைப் பணிவோடு செய்தல்.

02). வீட்டில் தாய், தந்தை மற்றும் வயதில் மூத்தோரைக் கனம் பண்ணுவார்.பெற்றோர், பெரியார், வயதில் மூத்தோருக்கு மரியாதை செலுத்துவது சிறந்த பண்பாகும் என்பதை விளக்கமாகக் கூறுங்கள்.

**எடுத்துக்காட்டு** – பெற்றோரை, பெரியோர்களை தினமும் பாதங்களில் விழுந்து வணங்கச் செய்தல்.

- அவர்கள் வரும்போது எழுந்து நின்று மரியாதைசெய்தல்.
- வயதில் மூத்தோர் சொற் கேட்டு நடத்தல்
- அவர்கள் கூறும் வேலைகளைத் தட்டாமல் செய்தல்.

03). பாடசாலையில் அதிபர், ஆசிரியர்களைக் கனம் பண்ணுவார். ஆசிரியர், அதிபர் கூறும் கருத்துகளுக்குக் கீழ்படிந்து நடப்பார்.

**எடுத்துக்காட்டு** – அதிபர், ஆசிரியர் வகுப்பறைக்கு வரும்போது அமைதியாக எழுந்து நின்று பணிவுடன் வணக்கம் கூறுதல்.

- அதிபர், ஆசிரியர் கூறும் புத்திமதிகளைக் கேட்டு நடத்தல்.
- அவர்களுக்கு உதவுதல்.
- அமைதியாக அவர்களுடன் உரையாடுதல்.

04). வீட்டிலும் பாடசாலையிலும் இடம்பெறும் நிகழ்வுகளின்போது ஆசிரியர், அதிபர், பெற்றோர், மூத்தோர்களை விழுந்து வணங்கி ஆசிபெற வழிப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு** – பெற்றோ தினத்தின் போதும்

- ஆசிரியர் தினத்தின் போதும்
- பரிசளிப்பு விழாவின் போதும்
- கலை விழாவின் போதும்

**சிறுவயது முதல் கனம் பண்ணுதலை நடைமுறை வாழ்வில் பயன்படுத்தப் பழக்குதல்.**